

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 361 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 25 – வியாழக்கிழமை 10 ஆகஸ்ட் 2023 – வேலூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 361 : Thiruvalluvar Year - 2054 - Aadi 25 - Thursday 10 August 2023 - Vellore 12 Pages ₹ 5.00


## நான் நம்பும் விஷயத்திற்காக உயிரைவிடவும் தயார்! தியாகம் செய்யவும் தயார்!

# மணிப்பூரில் இந்தியத் தாய் கொலை!

### நாடாளுமன்றத்தில் மோடி அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ராகுல் காந்தி ஆவேச குற்றச்சாட்டு!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (9.8.2023) பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான பாராட்டு விழாவில், அம்மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் மடிக்கணினிகளை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இல்லம் தேடிக் கல்வி சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி, தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் உறுப்பினர் செயலர் இரா.சுதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**டெல்லி, ஆக. 10 -**

**“நான் நம்பும் விஷயத்திற்காக உயிரைவிடவும் தயார்! தியாகம் செய்யவும் தயார்! என்றும் மணிப்பூரில் இந்தியத் தாய் கொலை செய்யப் பட்டுள்ளார்” என்றும் நாடாளு மன்றத்தில் மோடி தலைமையிலான ஒன்றிய அரசின் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மான விவாதத்தில் ராகுல் காந்தி அவர்கள் உரை யாற்றுகையில் குறிப்பிட்டார்.**

மோடி அரசு மீது “இந்தியா” கூட்டணிக் கட்சிகள் சார்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நம்பிக்கை யில்லாத் தீர்மானத்தின் மீது மக்களவையில் நேற்று 2வது நாளாக விவாதம் நடைபெற்றது.

இதில், காங்கிரஸ் கட்சி சார்பில் ராகுல் காந்தி கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

சபாநாயகர் அவர்களே, முதலில் மீண்டும் என்னை மக்களவையில் இணைத்துக் கொண்டதற்கு நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒற்றுமை நடைபயணத்தின் போது அனைத்துத் தரப்பு மக்க ளின் குரல்களையும் கேட்டேன். நான் இன்று பேச தொடங்கிய வுடன் வெறுப்புடன் சிலர் பேசத் தொடங்கினார்கள்; இந்த வெறுப் புணர்வை நீக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். ஒற்றுமை யாத்திரையின் மூலமாக நான் நிறைய கற்றுக் கொண்டேன்; உண்மையான இந்தியாவை அந்தப் பயணத்தின் வழியாக நான் பார்த்தேன். நான் மணிப் பூருக்கு நேரில் சென்றேன்.

கடந்த முறை நான் பேசியபோது அதானியை குறித்து பேசியது



உங்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தி இருக்கலாம்.

**பா.ஜ.க.வினர் அச்சப்பட வேண்டாம்!**

உங்கள் மூத்த தலைவர்கள் வேதனை அடைந்திருக்கலாம். அந்த வேதனை உங்களையும் பாதித்திருக்கலாம். அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், நான் உண்மையைப் பேசினேன். இன்று நான் அதானி பற்றி பேசப் போவதில்லை. மணிப் பூர் பற்றியே பேசப் போகிறேன் என்பதால் எனது பா.ஜ.க. நண்பர் கள் அச்சப்பட வேண்டியதில்லை.

இதயத்தில் இருந்து பேசும் பேச்சு இதயங்களை சென்றடை யும் என்பதால், இதயத்தில் இருந்து பேசப் போகிறேன். 130 நாட்களுக்கு நாட்டின் ஒரு முனை யில் நடைபயணம் இருந்து மற்றொரு முனைக்கு மக்களுடன் இணைந்துபயணம்நடத்தினேன். என்னுடைய பயணம் இன்னும் முடிவடையவில்லை. பயணத்தின் போதும், அதன் பிறகும் நிறைய பேர் என்னிடம் ஏன் பயணம் செல்கிறீர்கள் என்று கேட்டார்கள். குமரியில் இந்தப் பயணத்தை துவங்கிய போது, நாட்டை புரிந்து கொள்வதற்காகவே இந்திய ஒற்றுமை நடைபயணத்தை ஆரம்பித்தேன்.

**அனைத்தையும் தியாகம் செய்ய தயார்!**

ஒற்றுமைப் பயணத்தில் நிறைய விஷயங்களை கற்றுக் கொண்டேன். நான் நம்பும் விஷயத்துக்காக உயிரை விடவும், பிரதமர் விரும்பி னால் சிறை செல் லவும் தயாராக உள்ளேன். 10ஆண்டுகளாகபா.ஜ.க.வினரால் நான் அலைக்கழிக்கப்பட்டு உள்ளேன்.

எனது பயணம் துவங்கிய போது பயம் இருந்தது. பயணத்துக்காக அனைத்தையும் தியாகம் செய்ய தயாராக இருந்தேன். இந்தப் பயணத்தில்


தொடர்ச்சி 4ஆம் பக்கம்


### ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்த டெல்லி சேவைகள் சட்ட மசோதாவுக்கு எதிராக தி.மு.க. வாக்களிப்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு கெஜ்ரிவால் நன்றி!

### அரசியலமைப்பை பலவீனப்படுத்தும் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்ப்பதாகக் கடிதம்!

*புதுடெல்லி, ஆக.10-*

நாடாளுமன்றத்தில் ஒன் றிய அரசு கொண்டுவந்த டெல்லி நிர்வாக மசோதாவை எதிர்த்து தி.மு.க. வாக்களித் தமைக்கு தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரி வித்து, டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர் கள் கடிதம் எழுதியுள்ளார்.

தலைநகர் டெல்லியை ஒரு மாநகராட்சியைப்போல் தரம் குறைக்கும் வகையில், மாநிலங்களவையில் ஒன்றிய பா.ஜ.க. அரசால் கொண்டு வரப்பட்ட டெல்லி சேவை கள் சட்ட (திருத்த) மசோ தாவினை திராவிட முன்



னேற்றக் கழகம் சார்பில் எதிர்த்ததைத் தொடர்ந்து, அதற்கு நன்றி தெரிவித்து டெல்லி முதலமைச்சர் அர விந்த் கெஜ்ரிவால் அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று முன்தினம் (8.8.2023) கடிதம் எழுதியுள்ளார்.

டெல்லி முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடி தத்தில், ஒன்றிய அரசு கொண்டுவந்த டெல்லி சேவைகள் சட்ட (திருத்த) மசோதா, 2023ஐ எதிர்த்து வாக்களித்த திராவிட முன் னேற்றக் கழகத்திற்கு, 2 கோடி டெல்லி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், நாடாளு மன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் டெல்லி மக்க ளின் உரிமைகளுக்காகப் போராடியதற்காக மன மார்ந்த பாராட்டுக்களைப் பதிவு செய்வதாகவும் குறிப் பிட்டுள்ளார்.

இந்திய அரசியலமைப் பின் கொள்கைகள் மீது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை பல் லாண்டுகளுக்கு நினைவு கூரப்படும் என்று தெரிவித் துள்ள டெல்லி முதலமைச்சர் அவர்கள், அரசியலமைப்பை பலவீனப்படுத்தும் சக்தி களுக்கு எதிரான போராட் டத்தில் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் தொடர்ச்சியான ஆதரவை தாம் எதிர்பார்ப்பதாக தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## திராவிட மாடல் ஆட்சியில்

# பள்ளிக் கல்வியின் தரம் உயர்வு!

### முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஆக. 10 -**

**“திராவிட மாடல் ஆட்சியில் பள்ளிக் கல்வியின் தரம் உயர்ந்துள்ளது” என்றும் “முதன்மை உயர் கல்வி நிறுவனங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்துவோம்” என்றும் முதன்மை உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்களைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகை யில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை யில் நேற்று (9.8.2023) பள்ளிக் கல்வித் துறை சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நாட்டின் முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்குச் செல்லும் அரசுப் பள்ளி மாணவர் களுக்கான பாராட்டு விழாவில், அம்மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ் மற்றும் மடிக்கணினி களை வழங்கி, வாழ்த்தி ஆற்றிய உரை வருமாறு:–

பள்ளிக் கல்வித் துறையை பொறுத்தவரைக்கும், தினந்தோறும் மிகச்சிறந்த முன்னெடுப்புகளை எடுத்து வருகிறோம். இருந்தாலும், இன்றைக்கு ஒரு Special Day!

தமிழ்நாட்டினுடைய பள்ளிக் கல்வி வரலாற்றில் ஒரு முக்கியமான நாள்! கொண்டாட்டத்திற்குரிய நாளாக அமைந்திருக்கிறது. அந்த மகிழ்ச்சி யோடு தான் உங்களை எல்லாம் நான் சந்திப்பதற்கு வந்திருக்கிறேன்.

**தமிழ்நாட்டு மாணவர்கள் உயர் கல்விக்குப் போகவேண்டும்!**

உங்கள் பெற்றோருக்கு இருக் கின்ற அதே அக்கறையுடனும், அன்புடனும் நீங்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டு குழந்தைகள் எல்லோ ரும் கல்வி கற்கவேண்டும், உயர் படிப்புகளுக்குப் போகவேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன். ஏனென்றால், கல்வி நமக்கு இங்கே சுலபமாக கிடைக்கவில்லை. ஒரு காலத்தில் கல்வி நமக்கு எட்டாக்கனி!

இன்றைக்கு நாம் எல்லோரும் படிக்கிறோம் என்றால், அதற்குப் பின்னால், நம்முடைய முன்னோர்கள் நடத்திய, ஏராளமான போராட்டங் கள்தான் காரணமாக இருக்கிறது.

நீதிக்கட்சி காலத்தில் இருந்து சமூக நீதியை வலியுறுத்தி வரும் சமூக சீர்திருத்தத் தலைவர்களால் தான் இந்த மாற்றத்தை நம்மால் உரு வாக்க முடிந்தது. இந்த மாற்றத்தை இன்னும் சிறப்பாக்க நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட் டுக் கொண்டிருக்கிறது.

**பார்வையற்ற மாற்றுத் திறனாளி இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி!**

எல்லாவற்றிற்கும் ஒரு தூண்டு தல் அவசியம் தேவை. அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக சொல்லவேண் டுமென்றால், பீனோ சபீன் என்று ஒருவர். சென்னையைச் சேர்ந்த பெண் அவர். இப்போது, இந்திய வெளியுறவுத் துறை அதிகாரியாக இருக்கிறார்கள். எத்தனையோ அதி காரிகள் இருக்கிறார்கள். ஆனால், இவரை மட்டும் நான் குறிப்பிட்டுச் சொல்வதற்கு என்ன காரணம் என்னவென்று கேட்டீர்கள் என் றால், அவர் பார்வையற்ற மாற்றுத் திறனாளி.

இந்தியாவிலேயே முதல் பார்வை யற்ற இந்திய வெளியுறவுத் துறை (IFS) அதிகாரி என்ற பெருமை கொண்டவர் அவர். கடந்த 2006ஆம் ஆண்டு, அவர் School Studentஆக இருந்தபோது, அமெரிக்காவில் நடத்தக்கூடிய ஒரு கருத்தரங்கில் கலந்துகொள்ள நிதி உதவி கேட்டு, ஒரு கோரிக்கை வைத்தார்.

அப்போது சமூக நலத்துறை அமைச்சராக இருந்தபோது டாக்டர் பூங்கோதை அவர்களிடம் இந்த கோரிக்கை மனு தரப்பட்டது. அதற் கான வரைமுறை அரசிடம் இல்லை என்று அதிகாரிகள் சொன்னார்கள். அன்றைக்கு நான் உள்ளாட்சி மற் றும் ஊரகத் துறை அமைச்சராக இருந்தேன். அந்தப் பிரச்சினை என்னுடைய கவனத்திற்கு வந்தது. உடனடியாக பீனோ சபீனுக்காக தனி அரசாணை வெளியிட்டோம். அவர் அமெரிக்கா சென்றுவிட்டு வருவதற்கான மொத்த செலவை யும் அரசு ஏற்றுக்கொண்டது.

அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர்தான் அதற்கான காசோலையை (Cheque) கொடுத் தார். இப்போது நாம் ஆட்சிக்கு வந்த பிறகு என்னை சந்தித்த பீனோ சபீன் அவர்கள் என்னிடம் வாழ்த்து பெற வந்தார்கள். இப்படி சிறியதாக ஒரு support. சிறியதாக ஒரு motiva tion. அதுபோதும். நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள் அடித்து தூள் கிளப்பிவிடமாட்டீர்கள்? இது மாதிரியான தூண்டுதல்கள்தான்,


தொடர்ச்சி 4ஆம் பக்கம்